பக்கங்கள் : 04          விலை ரூபா 5-00

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

தீபம் : 44          ஒக்ரோபர் - 1995          ஒளி : 19

### அன்புடமை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 71
அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 72
அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. 73
அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு 74
அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு. 75

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,
இல 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

★ இனப்பிரச்சனை தீர்வுக்கு —

# தமிழ் மக்கள் மீதான யுத்தத்தை நிறுத்தி; பேச்சு வார்த்தை மூலம் முடிவுகாணுங்கள்!

- யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஜனாதிபதிக்கு கடிதம் -

*யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மீது சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்படும் அழிவுகள், அவலங்கள், படுகொலைகள் ஆகியவற்றை உடனடியாக நிறுத்தக் கோரியும், இனப் பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை நடாத்தி அரசியல் தீர்வொன்றை எடுக்குமாறும்; பொருளாதாரத் தடையை நீக்கி மக்களைப் பட்டினிச் சாவில்இருந்து விடுவிக்குமாறும்; யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அவசர கடிதம் ஒன்றை ஜனாதிபத் சந்திரிகாவுக்கும், கூட்டுறவு அமைச்சர் அமரசிறி தொடங்கொடவுக்கும் அனுப்பிவைத்துள்ளது.*

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

★ சிறிலங்கா இராணுவம் கனரக யுத்த தளபாடங்களுடன் பல்வேறு பெயர்களினாலான இராணுவ நடவடிக்கை மூலம் யாழ். குடாநாட்டில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களுக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தி வருவதனால் மக்கள் சொல்லொணா துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

★ மக்கள் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமாக மேற்கொண்டுவரும் அகோர 'ஷெல்' தாக்குதல்களினால் அப்பாவி மக்களின் - பச்சிளம் பாலகர் முதல் முதியோர் வரை - உயிர்கள் பறிக்கப்படுவதுடன் அவர்களது சொத்துக்களுக்கும்பாரிய அழிவுகளை ஏற்படுத்துகிறது

★ 1990க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட ஈழயுத்தத்தின் பின் கூட்டுறவு நிறுவனங்களின் பலகோடிரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள், அபகரிக்கப்பட்டும் நாசமாக்கப்பட்டுமுள்ளன. அண்மைக் காலத்தில இடம்பெற்ற "முன்னேறிப்பாய்தல்" "கைநூக்கல்" 'இடிமுழக்கம்' பெயர்களினாலான இராணுவ நடவடிக்கைகளினால் மேலும் பல கூட்டுறவு நிறுவனங்களின் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டதுடன், மக்கள் சேவையில் பணியாற்றிய கூட்டுறவுப்பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் பலர் இதன்போது கொல்லப்பட்டுமுள்ளனர். காயப்பட்டுமுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளினால் பல்லாயிரக் கணக்கான ரூபா செலவில் 100பககணக்கான ஹெகரர் நிலப்பரப்பில் விவசாயிகளால் மேற்கொள்ளப

(4-ம் பக்கம் பார்க்க)

## வெதுப்பக ஊழியர் ஷெல்லுக்கு பலி

நீர்வேலி பல நோ. கூட். சங்க வெதுப்பகத்தில் பாண் தயாரிப்பில ஈடுபட்டிருந்த பிரதான பாண்சுடுநர் (8 குழந்தைகளின் தந்தையான) திரு கா. அமிர்தசந்திரன் பலாலி இராணுவத்தின் ஷெல் வீச்சில் ஸ்தலததிலேயே பலியானார். ஐந்துபோர் படுகாயத்துக்குள்ளாகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வலி கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற ''இடிமுழககம்' இராணுவ நடவடிகையின் போது இப்பரிதாப சம்பவம் இடம பெற்றது.

ஷெல் வீச்சில பலியான கா. அமிர்தசந்திரன் (வயது-43) திருமலையில் இருந்து இடம பெயர்ந்து வந்தவர் என்றும் தெரிவிககப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பொது முகாமையாளர் காயம

வலிகாமம கிழக்குப் பகுதியில் இடம்பெறற ''இடிமுழக்கம'' இராணுவ நடவடிக்கையின்போது எறிகணை வீச்சில் அச்சுவேலி பல நோ. கூ. சங்க பொது முகாமையாளர், திரு. த. கவீந்திரதாஸ படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீர்வேலியில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்ற இச் சமபவத்தின்போது அவரது மனைவி திருமதி மா. கவீந்தரதாஸ், அவரது மகள் க. துருமகள் வயது 12 ஆகியோரும படுகாயஙகளுக்குள்ளாகி வைத்தியசாலையில அனுமதிககப்பட்டுள்ளவர்.

## மா விநியோகம்

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட கோதுமை மா தனியார் வெதுப்பகங்களுக்கும் பல நோ. கூ. சங்க வெதுப்பகங்களுக்கும், பஙகிட்டு வழங்கப்படவிருப்பதாக யாழ்ப்பாணம் உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திருமதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவில் அற்பணிப்பு அவசியம்

''கூட்டுறவுத் துறையில் சேவை மனப்பான்மையுடனும் அர்ப்பணிப்புடனும் சேவை புரிந்து அத்துறையை வளர்த்தெடுக்கவேண்டும். இதற்கு திறமைவாய்ந்தவர்களின் ஆற்றல்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'

கூட்டுறவு முதுநிலை முகாமைத்துவ பயிற்சிநெறி ஆரமப வைபவத்தில் ஆசியுரை வழங்கிய தமிழீழநிர்வாகசேவையின் கூட்டுறவுப பகுதி பொறுப்பாளர் திரு க பரணி இவ்வாறு கூறினார்.

கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு தா. கந்தசாமி தலைமையில நடைபெறற இந்நிகழ்வில் யாழ் கூ. அ. உ ஆணையாளர் திரு. த. சபாரத்தினம் பேசுகையில் ;

கூட்டுறவுப் பணியாளர்களது பொறுப்புக்கள் முறைப படி பலசந்தர்ப்பங்களில் ஒப்படைக்கப்படாமையால் அவர்கள் தம் பொறுப்புகளைமறந்து பல பிரிவுகளாகப் பிரித்து செயறபடுகின்றாா்கள.

எனவே இப்பொழுது பெறும பயிற்சியைக் கொண்டு தரமான ஆலோசனைகளை நெறியாளர்களுக்கு வழங்கி சங்கவளர்ச்சிக்கு உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

திருமலை கூ. பயிற்சிகலலூரி அதிபர் திரு. கே. எஸ். அருளானந்தம பேசுகையில், கூட்டுறவை தங்குமடமாகக்கருதாது பெறும் பயிற்சியைத் தகுந்த முறையில் பயனபடுத்த வேணடுமென்று கூறினார்.

(4-ம பக்கம் பார்க்க)

## மூலப்பொருள் தடை: நெசவாளர் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ள பிடவை நெசவாளர்களுக்குத் தேவையான நூல் வகைகள், சாயம் போடும் இரசாயன வகைகள் சாயவகைகள் ஆகியவற்றை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கு கடந்த எட்டுமாதங்களாக அரசு அனுமதி அளிககாததை அடுதது நெசவுத்தொழில் பாதிப்படைந்துள்ளதாக யாழ். மாவட்ட பிடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எம. புலேந்திரன் தெரிவித்துளளார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில், பிடவை நெசவுத் தொழிலுக்குத் தேவையான இம் மூலப் பொருட்களை கொழுமபில் இருந்து எடுத்து வருவதற்கு முயறசி எடுக்கப்பட்டபோதும கடநத 8 மாதங்களாகியும் தொடர்ந்தும் அரசு தடைவதித்து வருவதனால் இத் தொழிலை நமபி இருக்கும சுமார் 1500 குடும்பங்கள் தொழிலை இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் கவலை தெரிவித்தார்.

## குறுங்கால கூட்டுறவுக் கல்வித்திட்டம் தயாரிப்பு

விவசாயம், மீன்பிடி, கால் நடை பிடவை நெசவு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின அங்கத்தவர்களின் மத்தியில் அறிவு, ஆற்றல், வினைத்திறன் ஆகியவற்றை ஏற்படுத்தி அவர்களை சமூக பொருளாதார, கலாச்சார நட

(4-ம பக்கம் பார்க்க)

## கூட். சங்கங்கள் பாண் விநியோகம

பல நோ. கூட். சங்கங்கள் தமது வெதுப்பகங்கள் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பாணை உற்பத்திசெய்து ஒரு இறாத்தல் பாணை 5/- ரூபாவுக்கு மக்களுக்கு விநியோகித்து வருகின்றன.

சுன்னாகம், ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய பல நோக். கூட். சங்கங்கள் தாம் உற்பத்தி செய்யும் பாணை தமது வெதுப்பகங்களிலும், மக்கள் செறிவான பகுதிகளிலும் வைத்து விநியோகம் செய்து வருகிறார்கள் என்றும், ஊர்காவற்றுறை பல நோ. கூ. சங்க வெதுப்பகத்தில் சங்கத்தலைவர், பொதுமுகாமையாளர் நேரடி மேற்பார்வையில் பாண் விநியோகம் நடைபெறுவதாக எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

## புதிய சுற்று நிருபம்

பணித்தடை ஆணைக்கு உட்படுததப்பட்ட கூட்டுறவு ஊழியர்களின் சம்பளங்களையும, படிகளையும் முறைப்படி தயாரித்து தனியான கணக்கொன்றில் வைப்பிலிட்டுத் தனக்கு அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு கூறும் சுற்று நிருபமொன்று கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் செயலாளர் திரு. பீ. ஆர். பெரேரா தேசிய மட்டததிலான சகல கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கும அனுப்பி வைத்துள்ளார்.

(இது தொடர்பான சுற்று நிருபம் 2-ம் பக்கத்தில் முழுமையாக பிரசுரமாகியுள்ளது.

## பிடவை விநியோகம்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு யாழ் மாவட்ட விவசாய சமாசத்தினால் கொழும்பில் இருந்து 'மாகோ' கப்பல மூலம எடுத்துவரப்பட்ட துணிவகைகளை பல நோ. கூ. சங்கங்கள் நியாய விலையில் விற்பனை செய்ய சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக சமாசப் பொதுமுகாமையாளர் திரு. வெ. செல்லத்துரை தெரிவித்தார்.

சலஞ்சர், பப்ளின், சீத்தை, சாரங்கள்' வேட்டி, வகைகள் ஆகியனவே சமாசத்தினால் எடுத்துவரப்பட்ட துணிவகைகளாகும்.

### சிந்தனைச் சுடர்

மூடர்களின் கொடுமையான ஆட்சியைக் காட்டிலும் அறிவாளிகள் செய்யும் கொடுமை சக்திவாய்ந்தது.

— விவேகானந்தர்

## ஐக்கிய எண்ணப்

# "கோயபல்ஸ்" அறிக்கைகள்

வடபகுதி தமிழ் மக்களை சிறிலங்கா அரசு, விமானக் குண்டு வீச்சுக்களினாலும், எறிகணை வீச்சுக்களினாலும் படுகொலை செய்து வரும் அதேவேளை அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்களை அனுப்பாது பட்டினி போட்டுக் கொல்லும் நடவடிக்கைகளில் இடைபோது முனைப்பாக செயற்பட்டு வருகிறது.

செயலக உணவுக் களஞ்சியங்கள் யாவும் வெறும் மண்டபங்களாக காட்சி அளிக்கும் நிலையில்; அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் 'வடபகுதி மக்களின் தேவைக்கு அதிகமான உணவுப்பொருட்களை அரசு அனுப்பி வைத்துள்ளதாக' அறிக்கை விட்டிருப்பதுடன் அதனை வெகுஜனத்தொடர்பு சாதனங்கள்மூலமும் பிரசாரம் செய்துவருகிறார்.

இத்தகைய பிரசாரங்கள் மூலம், உலக நாடுகளின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு தமிழினப் படுகொலைகளை கச்சிதமாக நடாத்துவதற்கு ஆயுதங்களை வாங்குவதற்கு அரசு போடும் கபட நாடகத்தின் ஒரு அங்கமே என இதனைச் சந்தேகிக்கவேண்டியுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் இந்த அறிக்கை பொய்யானது என்பதை யாழ். செயலக புள்ளி விபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

யாழ். குடா நாட்டில் உள்ள சுமார் 8 லட்சம் மக்களுக்கு மாதாந்தம் சுமார் 12 ஆயிரம் மெற். தொன் உணவுப் பொருட்கள் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இம் மதிப்பீட்டு அடிப்படையில் கடந்த 9 மாதங்களுக்கும் 1 லட்சத்து 8 ஆயிரம் மெ. தொன் உணவுப் பொருட்களை அரசு அனுப்பிவைத்திருக்க வேண்டும். ஆனால் அரசு, புனர்வாழ்வு அமைச்சு, கூட்டுறவு, தனியார் துறைமூலம் சுமார் 50 ஆயிரம் மெ. தொன் உணவுப் பொருட்களையே அனுப்பி வைத்துள்ளதாக அறியமுடிகிறது.

1990-க்குப்பின் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த 57 ஆயிரத்து 600 குடும்பங்களுக்குரிய (யூலை 15-ல் இருந்து ஒக்ரோபர் முடியும்வரை) 14 வார நிவாரணமும், அண்மையில் இடம்பெற்ற திடீர் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த சுமார் 75 ஆயிரம் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க முடியாத நிலையில் யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதியினர் உள்ளனர்.

உண்மை நிலை இவ்வாறிருக்க, திடீர் இராணுவ நடவடிக்கைகள்மூலம் அப்பாவி மக்களின் உயிர்களையும், உடைமைகளையும், உற்பத்திப் பொருட்களையும், அன்றாட தேவைக்குரிய உணவுப் பொருட்களையும் அபகரித்துக்கொண்டு, "கோயபல்ஸ்" அறிக்கைகளை வெளியிட்டு உலக நாடுகளுக்கு தன்னை "நல்லபிள்ளை"யாக காட்ட அரசு முனைகிறது.

இத்தகைய 'கோயபல்ஸ்' தனமான அறிக்கைகள் போன்று வெளிவரும் "ஜானைத்" அறிக்கைகள் தமிழ் பேசும் மக்களுடைய சுதந்திர உணர்வை விழிப்படையச் செய்யுமே ஒழிய, விழிப்புணர்வை மழுங்கடிக்காது புதிய உத்வேகத்தை கொடுக்கும் என்பதை சுட்டிக் காட்டுவதுடன் அது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துமென எச்சரிக்க விரும்புகிறோம்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

---

சுற்று நிருப இல : 215 / 95

# பணித்தடையாணைக்குட்படுத்தப்பட்ட ஊழியர்களின் சம்பளங்களைத் தயாரித்து ஒதுக்கிவைத்தல்!

ஏதேனுமொரு துர்நடத்தை காரணமாக பணித்தடையாணைக்கு உட்படுத்தப்பட்ட கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிகளைச் செலுத்த முடியாதவிடத்து, அவர்களுக்கு உரித்தான சம்பளங்களையும் படிகளையும் முறைப்படி தயாரித்து, ஒதுக்கி வைக்காத காரணத்தினால் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு கஸ்டங்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. ஒழுக்காற்று நடவடிக்கையின் பின் எல்லா நிலுவைச் சம்பளங்களையும் ஊழியர்களுக்கு ஒரே தடவையில் செலுத்த நேர்வதால் இத்தகைய நிலமை தீவிரம் அடைந்துள்ளது.

பணித்தடையாணையிடுவதை தொடர்ந்து ஊழியர் ஒருவர் சங்கத்தின் சேவைக்காக சமூகம் அளிக்காவிடினும், அவர் சங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியில் இருக்கும் ஒரு ஊழியர் என்பதை மறத்தலாகாது. பெரும்பாலும் பணித்தடையாணை இடப்பட்ட ஊழியர்கள் ஒழுக்காற்று நடவடிக்கையின்பின் அல்லது மேன்முறையீட்டு நடவடிக்கையின் பின் மீளச் சேவையில் நியமிக்கப்படுகிறார். இதனால் அவர்களுக்கு விதித்துரைக்கப்பட்ட சம்பளங்கள், படிகள் மாத்திரமல்லாமல் சம்பள உயர்வுகளைக் கூட வழங்க வேண்டிய நிலமை ஏற்படுகிறது. ஆதலால் எவரேனும் ஒரு ஊழியரின் பணித்தடையாணையைத் தொடர்ந்து அவருக்கு விதித்துரைக்கப்பட்ட சம்பளங்களையும், படிகளையும் (சேவையிலுள்ள ஊழியராகக் கருதி) விதித்துரைக்கப்பட்டவாறு தயாரித்து தனியான கணக்கொன்றில் வைப்பிலிட்டு வைத்தல் வேண்டும்.

தங்கள்சங்கத்தில் தற்போது பணித்தடையாணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஊழியர்களுக்கு விதித்துரைக்கப்பட்டவாறு செலுத்தப்படவேண்டிய சம்பளங்களையும், படிகளையும் முறைப்படி கணித்து தனியான கணக்கொன்றில் வைப்பிலிட்டு, அது தொடர்பாக எனக்கு அறிவிக்கவும் ஏனைய ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளங்களை செலுத்துவது போன்று, பணித்தடையாணைக்கு உட்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டிய சம்பளங்களை மாதாந்தம் குறித்த கணக்கில் வரவில் இடப்பட வேண்டும்.

இத்தகைய முறையில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஏதேனும் ஒரு பணித்தடை ஆணைக்கு உட்படுத்தப்பட்ட ஊழியர் ஒருவருக்கு நிலுவைச் சம்பளங்களையும் மற்றும் படிகளையும் செலுத்த நேர்ந்தாலும், நிதி குறித்தொதுக்கி உள்ளபடியால் சங்கம் நிதிசார் கஸ்டங்களை எதிர்நோக்க நேரிடாது. ஆதலால் ஒவ்வொரு சங்கத்தினாலும் இந்த அறிவுறுத்தல்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும் என்பதை வலியுறுத்தித் தெரிவிக்கிறேன்.

# "லெயிட்லோ" ஆணைக்குழுவில் சங்க முகாமையாளர்

கூட்டுறவுச் சங்கமொன்றின் தகுதிவாய்ந்த பொது முகாமையாளருக்கு இருக்க வேண்டிய தகமைகள்.

தகமைகள் :

1) பொது முகாமையாளர் செயல்நோக்கம்கொண்டவராகவும், தொலைநோக்கு ஆற்றல் உள்ளவராகவும், நுண்ணறிவு உள்ளவராகவும், பொறுப்புணர்ச்சி யுள்ளவராகவும்தோற்றம் அமைய வேண்டும்.

2) தான் முகாமை செய்யும் சங்கத்தின் நடவடிக்கையின் தேவைக்காக அவர் அச்செயல்பாட்டுக்கான தொழில்நுட்ப அறிவு இருத்தல் வேண்டும். அல்லது அங்கு கடமையாற்றும் தொழில்நுட்பவியலாளரின் வேலைத்திறனை அறிந்து கொள்ளும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

3) சங்க முன்னேற்ற நடவடிக்கைக்காக சங்க முன்னோக்குத் திட்டங்களை வகுக்கக் கூடிய அதிகாரமும் ஆற்றலும் இருத்தல் வேண்டும்.

4) தனக்குகீழ் கடமையாற்றும் நல்ல விவேகமுள்ள பணியாளர்களைத் தெரிவு செய்து அவர்களோடு கூட்டொருமையுணர்வோடு கடமையாற்ற வேண்டும். எவ்வாறாயினும் தனது ஆணையுரிமையை பேணுதல் அவசியமாகும்.

5) பணிப்பாளர் சபையினருடன் சேர்ந்து கடமையைச் செய்யவேண்டும். அவர்கள் மேல் ஆணவத்துடன் அதிகாரம்செலுத்துவதோ அல்லது அடிவருடியாக செயலாற்றுவது தவிர்க்கப்பட வேண்டும்.

6) இவர் கூட்டுறவுத் தத்துவங்களையும், முறைமைகளையும் நன்குஅறிந்தவராக இருத்தல் வேண்டும்.

7) சங்க அங்கத்தவர்களோடும் பொதுமக்களோடும் நல்லுறவு பேணக்கூடியவராக இருக்க வேண்டும்.

> கூட்டுறவு அபிவிருத்தி சம்மந்தமான 'லெயிட்லோ' ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் உள்ள சங்க பொது முகாமையாளர்கள் பற்றிய விதந்துரைப்புகளை சுருக்கமாக பிரசுரித்துள்ளோம். இத்தொகுப்பு அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும் எனஎதிர்பார்க்கிறோம்.
>
> தொகுப்பு :
> — இ. இராசசுந்தரம் —
> மாதகல

## பொதுமுகாமையாளருக்குரிய கடமைகளும் பொறுப்புக்களும்.

1) சங்கத்தின் நாளாந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளியாவார்.

2) சங்கத்தின் நிதிக்கட்டுப்பாட்டுக்கும் முகாமைத்துவத்திற்கும் இவர் பொறுப்பாளியாவார்.

3) சங்க ஆவணி முகாமைத்துவத்திற்கு இவர் பொறுப்பாளியாவார்.

4) சங்க சொத்து உடமைகளுக்கும் இவரே பொறுப்பாளியாவார்.

5) சங்க அங்கத்துவ பொது மக்கள் நல்லுறவுக்கும் இவரே பொறுப்பாளியாவார்.

இக்கடமைகளையும் பொறுப்புக்களையும் சங்கப் பணிப்பாளர் சபையால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் பொதுவான கொள்கைகளுக்கு அமைவாகவும் நாட்டுப்பொதுச் சட்டங்களுக்கு அமைவாகவும் தனது அதிகாரத்தை செயற்படுத்த வேண்டும். இவரிடமே நிறைவேற்று அதிகாரம் அமைந்திருத்தல் மிக அவசியமாகும்.

## தகுதி வாய்ந்த பொது முகாமையாளரை இனங் காண்பது எப்படி?

1) சிலருக்கு இயற்கையாகவே முகாமைத்திறன் காணப்படுகின்றது.

2) பயிற்சிமூலம் ஒருவரை திறமையான முகாமையாளராக ஆக்க முடியும்.

இயற்கையான ஆளுமைஉள்ளவரும் பயிற்சிமூலம் முகாமைத்துவம் அறிந்தவரும் தற்காலிக நவீன முகாமைத்துவத்தை பயிற்சிமூலமும் நேரடியாக அனுபவம் வாய்ந்த ஒருவரின்கீழ் பயிற்சிபெற்ற ஒருவரே திறமையான ஒரு முகாமையாளராக செயல்பட முடியும். இவர் நல்ல ஒரு கூட்டுறவாளனாக இருப்பதுடன் மிகவும் திறமையான ஒரு வணிகராக இருத்தல் வேண்டும்.

சங்க பொது முகாமையாளரை நாம் ஒருபோதும் சில்லறைக் கடை வைத்திருப்பவராக கணிக்கக்கூடாது. இவரை நாம் ஒரு பயிற்றப்பட்ட நிபுணத்துவம் வாய்ந்த சங்க வியாபார நடவடிக்கைகளுக்கு நல்லதொரு வழிகாட்டியாக நோக்க வேண்டும். இவர் தனது கடமையை திறந்த துணிவுடனும் வேண்டிய அதிகாரங்களுடனும் சுதந்திரமாக செயல்புரியக்கூடியதாக இருத்தல் வேண்டும் எவருடைய தலையீடுகள் இல்லாது பணிப்பாளர் சபைத் தீர்மானங்களுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும். இவரது எந்த ஒரு செயல்பாடும் தனி ஒருவருடைய வேண்டுகோள்களுக்கு இணங்க செய்வது தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

ஆதாரம் : லெயிட்லோ (Laidlaw.) ஆணைக்குழு அறிக்கை

## கண்காட்சி

யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்க மகளிர் குழுவினரால் தையல், மனையியல் கண்காட்சி ஒன்று அண்மையில் யாழ். அடைக்கலநாயகி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது

சங்கத்தலைவர் திரு. சு. சிறில் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியின் போது யாழ் பிரதேச செயலர் திரு. க. குணராசா பங்குத்தந்தை அருட்திரு நீக்கலாஸ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் அருட்திரு கில்லறி ஜெபநேசன் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

## நூல் அறிமுகம்

நூல்: கச்சதீவு அன்றும் இன்றும்

ஆசிரியர்: ஏ. சூசை ஆனந்தன் (விரிவுரையாளர், புவியியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)

வெளியீடு: நடமாடும்துவிச்சக்கரவண்டிமீன் வணிகர்மன்றம் யாழ்ப்பாணம்.

விலை : 70 ரூபா

தமிழீழத்தின் கடல் வளத்தைப்பெருக்கும் மனித சஞ்சாரமற்ற கச்சதீவை இந்தியா மீண்டும் பெறவேண்டுமென அரசியல் வாதிகள் கோஷமெழுப்பிக் கொண்டிருக்கும் போது இது எங்கள் பூமியென வரலாற்று ஆவணங்களை திரட்டி கச்சதீவின் தொன்மையை விளக்கி முக்கிய காலகட்டத்தில் கச்சதீவு அன்றும் இன்றும் நூல் வெளிவந்திருக்கின்றது.

ஒரு தீவின் வரலாற்றை ஆவணப்படுத்துகின்ற போது கல்வியியல் புலத்துக்குரிய பண்புகளுடன் தரவுகளை எங்கெல்லாமோ தேடி அதனைப்பாமர மக்களும் புரியும்படி ஒருசிறந்த நூலாக இது வெளிக்கொணரப்பட்டுள்ளது.

தமிழீழப் போராட்டம் முனைப்படைந்ததினால், பாதுகாப்பைப் பலப்படுத்துகிறோம் என்ற அரசின் செயல்பாடுகளால, தமிழீழ மீனவர்களின் கடல்வள பொருளாதார மையமான கச்சதீவு இன்று போர் பிரதேசமாக மாறியிருப்பதை இந்நூல் ஆசிரியர் தெளிவுபடுத்தியிருப்பது எதிர்காலசந்ததியினருக்கு பயன்படுமென்பதால் பெருமைப்பட வேண்டியதாகவுள்ளது.

( 4-ம் பக்கம் பார்க்க )

# பாடசாலை மட்டத்தில் மீன்பிடியியல் கல்வி

*சென்ற இதழ் தொடர்ச்சி*

இலங்கை அதன் சூழவர உள்ள கடலிலும், கரையோர ஏரிகள், மற்றும் நன்னீர் நிலைகள் என்பவற்றிலும் மீன் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், கனிய வளங்கள் என்பவற்றை நிறைவாகக் கொண்டுள்ளது. இருப்பினும் இவ்வளங்களை உற்பத்தி செய்துகொள்வதற்கான தொழில்நுட்ப முறைகள் புராதன முறைகளைக் கொண்டதாகவேபெரும்பாலும் அமைந்துள்ளன. இவ்வளங்களை உற்பத்தி செய்துகொள்வதற்கான உரிய நுட்பம்வாய்ந்த ஆளணியினரை உருவாக்கிக்கொடுக்க எமது கல்விஅமைப்பு தவறிவிட்டது.

நாட்டில் கிடைக்கும் இயற்கைவளங்களையும் கருத்திற்கொண்டதாக அந்நாட்டின் கல்வித திட்டமிடல் அமைதலவேண்டும் என்று உணரப்பட்டதன் விளைவாக மீனபிடியியல் தொடர்பான கல்வி பாடசாலை மட்டத்தில் அமைந்த கலைத்திட்டத்தில் சேர்க்கும் முயற்சி 1970ல் பதவிக்குவந்த அரசின் கல்விக் கொள்கையில இடம்பெற்றது. இந்தவகையில 1972 ல் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தத்தில் தொழில்முன்னிலைப்பாடநெறிகள் பல சேர்க்கப்பட்டன. இப்பாடநெறிகளுள் கடலக மீன்பிடி, உள்நாட்டு மீன்பிடி ஆகிய இரு பாடநெறிகளும் சேர்க்கப்பட்டமை முன்னேற்றகரமான ஒரு நடவடிக்கை எனலாம்.

தேசிய கல்வி பொதுதராதரப் பரீட்சைகுத் தோற்றுவோர் (NCGE தொழில் முன்னிலைப பாடநெறிகளில இரண்டுபாடத்திற்கு தோற்ற வேண்டும் எனவும், இவற்றுள் ஒன்று தாம் வாழும் சூழலைப் பண்ணியாகக்கொண்ட வளங்கள சார்ந்ததாக அமைதல் வேண்டுமெனவும் கூறப்பட்டது. இதலால் கடற்கரையோரம் சார்ந்துள்ள கிராமங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள மீன்பிடியியலை ஒரு பாடமாக கற்றனர். பின்னர் 1977-இல் பதவியேற்ற ஐ. தே. கட்சி அரசு கல்விக் கொள்கையில் மாற்றத்தைக் கொண்டுவந்ததின் விளைவாக 1981 இல் புதிய கல்விச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது புதிய அரசின் கொள்கையில் தொழில் முன்னிலைப் பாடநெறிகளில் மாற்றங்கள் எதனையும் கொண்டுவரவில்லையாயினும் இரண்டு பாடநெறிக்குப்பதிலாக ஒரு பாடநெறியில் தோற்றினால் போதும் என நிபந்தனை விதித்தமையினால் மீன்பிடியியல் பாடநெறியில் பயின்றவர்கள் அதனைக் கைவிட்டனர். கடலோரப்பகுதிசார்ந்த மீன்பிடிக் கிராமங்களிலும் மாணவர்கள்கூட மீன்பிடியியல் பாடநெறியை கைவிட்டு விவசாயம் அல்லது மரவேலை அல்லது மனையியல்போன்ற பாடங்களையே விரும்பிக் கற்கலாயினர்.

மீன்பிடியியல் பாடநெறி பாடசாலை மட்டத்தில் கைவிடப்பட்டமைக்கு பின்வருவன காரணங்களாக அமைந்தன;

1) மீன்பிடியியல் பாடத்திற்கென ஆசிரியர் ஆளணியிலர் உருவாக்கப்படவிலலை.

2) மீன்பிடியியல் உற்பத்திக்கு உயர்கல்வி வாய்ப்பு அற்ற நிலை காணப்பட்டமை.

3) விவசாயம், மரவேலை, மனையியல்போன்ற பாடநெறிகளுக்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆளணியினர் இருந்தமையும் இககல்விக்கு உயர் கல்விவாய்ப்பு, ஆசிரியர் நியமனம்போன்ற எதிர்கால வாய்ப்புக்கள் கிடைத்தமை என்பன முக்கியகாரணங்களாயின.

மீன்பிடியியல் பாடநெறிகள் பாடசாலை மட்டத்தில் புகுத்தப்பட்டு 25 வருடங்கள் கழிந்த நிலையிலும் இது வரையில் எந்தப்பாடசாலையிலாவது இப்பாடம் போதக்கப்படுவதாக சான்றுகள் இல்லை.

இதற்கான உயர் ல்வி வாய்ப்புக்கள். தொழில் வாய்ப்புகள் அரசினால் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையும், விவசாயம், வர்த்தகம் போன்ற பாடநெறிகளுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் நன்கு விரிவடைந்துள்ளமையும் மனப்பாங்கு சார்ந்த காரணிகளும் முக்கிய காரணங்களாக கருதப்படுகின்றன. இன்று மீன்பிடியுடன் தொடர்புடைய அல்லது மீனவ சமூகத்தைச் சேர்ந்த பெற்றோர்களும் தமது பிள்ளைகளை எதிர்கால வாய்ப்பினைக் கருத்திற்கொண்டே செயற்பட்டு வருவதினையும் நாம் அவதானிக்கலாம் இது கல்வி அமைப்பிலுள்ள குறைபாடு தவிர பெற்றோர்கள் தவறு அல்ல இதனால் இன்று கடல வளம் அல்லது மீன்பிடியியல் தொடர்பான கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

இத்தகைய குறைபாடுகளைக் களைந்து வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பாடசாலை மட்டத்தில் மட்டுமல்லாது உயர்கல்வி அமைப்பிலும் வேலை வாய்ப்பிலும் மீன்பிடியியல் துறைசார்ந்த வாய்ப்புக்களை வழங்குவதற்கான முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஆரம்பகட்டமாக பாடசாலையில் செயற்படுத்தப்படாமல் இருக்கும் இப்பாடநெறியை போதிப்பதற்கும், போதிப்பதற்கு தடையாகவுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கவும் உரிய நடவடிக்கைகள் முனைப்புடன் செயறபடுத்தப்பட்டு வருகின்றன இதற்கு யாழ பல்கலைக்கழகம், யாழ. கல்வித் திணைகளம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழீழ கல்விக்கழகம், யாழ். மா. கூட்டுறவுச்சபை தொண்டமானாறு வெளிக்கள நிலையம் மீன்பிடிப் பயிற்சி நிலையம் என்பன இணைந்து பல்வேறு செயற் திட்டங்களில் இறங்கியுள்ளமை முக்கிய அம்சமாகும்.

(வளரும்)

*A. ஆசை ஆனந்தன்*
விரிவுரையாளர், புவியியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்.

# பிராந்திய வங்கி அமைப்பு முறைக்கு கூட்டுறவுத்துறை வாய்ப்பானது

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை பணிமனையில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள் பொது முகாமையாளர்களுக்கான கிராமிய வங்கிகள் சம்பந்தமான கருத்தரங்கில் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. இ. அருளானந்தம் வழங்கிய கருத்துக்கள் தொகுப்பு பிரசுரமாகியுள்ளது.

— ஆசிரியர் —

ஈழயுத்தம் தொடங்கிய 1-ம், 2-ம், 3-ம் காலகட்டங்களில் மக்களுக்கு ஆகக்கூடிய சேவையாற்றிய ஸ்தாபனம் கூட்டுறவுத் துறையாகும். இதறகுக் காரணம் கூட்டுறவுததுறை இங்கு ஸ்தாபன ரீதியாக வளர்ச்சியடைந்து நல்ல நிலையில் இருந்தமையாகும் கூட்டுறவுத்துறையின் ஒரு பகுதியாக கிராமிய வங்கிகள ஒவ்வொரு பல நோ. கூ. சங்கங்களினதும் கிளைகளாக கிராமிய மட்டத்தில் பெரு வளர்ச்சி கண்டுள்ளது.

இன்று எமது பிரதேசத்தை வளம்படுத்த ஆரோக்கியமான பிராந்திய வங்கி அமைப்பு அத்தியாவசியமாக தேவைபடுகிறது. இப்பிராந்திய வங்கி அமைப்பு கூட்டுறவு அமைப்பிலான வங்கி அமைப்பு முறையில் உருவாக்கப்படலாம். முப்பது வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டை, மாதகல் போன்ற இடங்களில் கிராமிய வங்கிகள சிறப்பாக இயங்கி வந்துள்ளமையை குறிப்பாகக் கூறலாம். இதற்கும் மேலாக பிராந்திய வங்கி அமைப்பு முறைக்கு உதாரணமாக யாழ்பபாணத்தில் இயங்கிவந்த 'கூட்டுறவு மாகாண வங்கி' யைக் குறிப்பிடலாம். இவ் வங்கி 8 கிளைகளுடன் 200 க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் இயங்கி வந்தது இவ்வங்கி பின்பு மக்கள் வங்கியுடன் இணைக்கப்பட்டது

1970-க்குப்பின் பல நோ கூ சங்கங்கள் புனரமைக்கப்பட்ட பின் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் பல இடங்களிலும் அறிமுகப்படுத்தப் பட்டன. இக்கிராமியவங்கிகளில் இன்று ஒருலட்சத்து முப்பதினாயிரம் கணக்குகள் உள்ளன. 80 மில்லியன் ரூபா வைப்பாக உள்ளது. அதேவேளை 55 மில்லியன் ரூபா விவசாயக் கடன்களாக வழங்கப்பட்டு அதனை அறவிடமுடியாதுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் எமது பிரதேசங்களின் அபிவிருத்தி கருதி "பிராந்திய வங்கியைக் கட்டிஎழுப்புவதற்கு கூட்டுறவுத்துறை, ஸ்தாபன ரீதியாக வளர்ச்சி கண்டிருப்பதும், அதற்குரிய வாய்ப்புகளும, வசதிகளும் உடையதான அமைப்பாக உள்ளது.

வங்கிகளுக்கு வாடிக்கையாளர்களுடைய வைப்புக்களைப் பாதுகாக்கவேண்டிய மிகப் பெரும் பொறுப்பு உண்டு. பிராந்திய வங்கி அமைப்பு உருவாக்கப்படும்போது இந்தப் பொறுப்பை முக்கியமாக கவனிக்கவேண்டும். வங்கி அமைப்பைக் கட்டி எழுப்ப பெரும்மூலதனம் வேண்டும். கடன்கள வழங்குவது மிகவும சிரமமான வேலை. எனவே கடன் கொள்கைவகுத்தல், கடன் வழங்கல், மதிப்பீடு செய்தல் அறவிடல் இவற்றுக்

( தொடர்ச்சி 4-ம் பக்கம் )

# விசித்திர உலகம்

## "மரணம்" என்பது கவலைப்பட வேண்டியதொன்றல்ல !!

இந்தோனிஷியா கோவில்களில் மூதாதையருக்கு தனிஇடம் கொடுக்கிறார்கள். பெரியோர்கள் முத்தியடைந்தபிறகு அவர்கள் தெய்வங்களாக வைத்து வழிபடுதலுக்குரியவர்கள் என்பது அவர்களது நம்பிக்கை அவர்களுக்காக தனிக்கோவில்களும் உண்டு. அதை "புதாபலே" என அழைக்கிறார்கள் இதைப் போலவே வீட்டிலும் சிறுகோவில்கள் கட்டி வழிபாடு செய்கிறார்கள்.

மூதாதையர்களை பெயர் சொல்லி அழைப்பதில்லை, "பதாரா" என்றுதான் அழைப்பார்கள், அவர்கள் முனிவராகவோ, வித்துவானாகவோ, தியாகமரணம் எய்தியதாக விருந்தால் அதற்கென சிறப்புப்பூஜையும் நடாத்துகிறார்கள்.

வீட்டில் தனியான ஆசனம் போட்டு இருக்கிறாகள், விக்கிரம் எதுவும் கிடையாது, அது ஆவிவந்து அமரும் இடமென ஒதுக்கி இருக்கிறார்கள். மனிதஉடலை விட்டபிறகும் சிலர் ஆவி உலகத்தில் இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள் அவற்றை நல்லவை கெட்டவை என பிரித்து நல்லவைக்கு பூஜைகளும் கெட்டவைகளுக்கு பலியும் கொடுக்கிறார்கள்.

ஒருவர் இறந்து விட்டால் ஈமைக்கிரியைகள் உடன் நடைபெறுவதில்லை நல்லநாள் பார்த்து அதை விழாவாகவே செய்கிறார்கள். தகனக்கிரியைகளில் ஆண்களும் பெண்களும் கலந்து விதம்விதமான பரிசுகளை தூய்மையின் அடையாளமாக கொடுத்து, தகனத்துக்கு முன்பு விருந்தும் பொழுது போக்கும் நடைபெறும். மரணம் என்பது துக்கப்பட வேண்டியதல்ல அது ஆத்மா பெறும் விடுதலை என்பது அவர்களது நம்பிக்கை.

— ஜோஸ்யர் சச்சி —

## நகரும் தீவு

★ அண்டார்டிக்காவில் உள்ள "போபேடர்" என்னும் தீவு 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இடத்தைவிட்டு 25 கி. மீ தூரம் நகர்ந்து விட்டதால் இத் தீவை மிக வேகமாக நகரும் தீவு என்று அழைக்கிறார்கள்

## இதுதான் அதிசயம்

★ பிரஷ்யாவின் ட்யூக் ஆல்பெர்ட்டும் அவரது மனைவி அன்னாமரியாவும் 1501-ம் ஆண்டு மே மாதம் 20-ம் திகதி ஒரேநேரத்தில் பிறந்தவர்கள். இது பெரிய ஆச்சரியமல்ல, ஆனால் 1568-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் திகதி இருவரும் சரியாக ஒரே நேரத்தில் இறந்து போனார்கள். இது அதிசயம் தானே!

## பத்திரமாக கரை சேர்ந்த குழந்தை

★ 1908-ம் ஆண்டு மார் செல்ஸ் நகரில் எட்டு மாதப் பெண்குழந்தை ஒன்று கடத்தல் காரரால் கடத்தப்பட்டு படகில் கொண்டு செல்லும்போது, கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பினால் கடத்தல் காரர்கள் இறந்துபோனார்கள். ஆனால் குழந்தை மட்டும் கடலில் மிதந்து வந்து பிரான்சில் உள்ள காஸிஸ் என்னுமிடத்தில் பத்திரமாக கரை சேர்ந்த தாம்.

— வா. வசீகரன் —

## கூட்டுறவை வாழ்த்துகின்றோம்!

முந்தைய ஒரு நாள்
இங்கிலாந்தில்
தந்தை றொபேட் ஓவனின்
சிந்தனைத தெளிவால்
செயலுருவம் பெற்ற
கூட்டுறவே:

உந்தன் வரவால்
உலகின் - கோடி
மாந்தர் உயர்வு பெற்றார்
அங்கே அயர்வு நீக்க - அவர்
ஆறுதல் கண்டார்
நாட்டுயர்வுக்கு
அடிக்கல் நாட்டிய - நல்ல
கூட்டுறவே! உன்

தன்னலமற்ற சேவை - நாளும்
தரணியில் தழைத்தோங்க
உள்ளம் திறந்து - உவகை
பொங்க வாழ்த்துகின்றோம்

வேறுபாடுகளற்று; மனதில்
மாறுபாடுகளற்று
மனிதர்தம்வாழ்வுவளர்வதற்கு
வடிகாலமைத்த கூட்டுறவே!
உந்தன் இந்த உயரிய சிந்தனை
உலகெலாம் பரந்து
ஊரெலாம் ஒற்றுமையடைய
ஒன்று பட்டு - உன்னை
நாம் போற்றுகின்றோம்.

— என். சத்தியபாமா
மன்னார் மா. கூ. ப. கல்லூரி

## தெரிந்து கொள்ளுங்கள்

★ உலகிலேயே முதன்முதல் வெளிவந்த அரசியல் நூல் அர்த்த சாஸ்திரம்

★ சர்வதேச நெல்ஆராய்ச்சி நிலையம் பிலிபைன்சில் உள்ளது.

## மனிதன்

★ மனிதன் உணர்பவனாக இருக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுபவனாக இருக்கக் கூடாது.

★ மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், இறந்தான், என்றிருக்கக் கூடாது. இது உயிர் இனங்களின் செயற்பாடு.

★ மனிதன் இறந்த பின்பும் அவனைப்பற்றி நினைக்கும் அளவுக்கு தன்னால் ஆனதை தன் சமுகத்திற்கு செய்ய வேண்டும்.

★ மனிதன் மூட்டை சுமந்து வாழ்ந்தாலும் மற்றவர் முதுகு சொறிந்து வாழக் கூடாது.

★ மனிதன் மனிதனுக்கு வழியைச் சொல்லலாம். ஆனால் வழித்துணையாகச் செல்லக் கூடாது.

★ மனிதன் ஒரு இடத்திற்கு போவதற்குமுன், போகின்ற இடத்தை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

— நாரையூரான்

# "இடி முழக்கம்"; இராணுவ நடவடிக்கை
# கூட். சங்க சொத்துக்கள் சேதம்

சிறிலங்கா இராணுவம் வலிகாமம் கிழக்குப் பகுதியில் "இடிமுழக்கம்" என்னும் பெயரில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையினால் அப்பகுதியில் இயங்கி வந்த இரு பெரிய கூட்டுறவுச் சங்கங்கள் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அனைத்தையும் இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வலி கிழக்கு வடபகுதி பல நோ. கூ. சங்கம் (அச்சுவேலி) அச்சுவேலி ப. தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரு சங்கங்களுமே சொத்துக்களை இழந்து இடம்பெயர்ந்த சங்கங்களாகும்.

இவ்விரு சங்கங்களும் சகல ஆவணங்களையும் கணக்குப் புத்தகங்களையும் விட்டு வந்துள்ளதாகவும், மீண்டும் இவை இயங்குவதற்குப் பாரிய நிதி நெருக்கடி நிலையை எதிர்நோக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவ பிடியில்; 7 அங். சிக்கினர்

மல்லாகம், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது தெல்லிப்பழை ப. தெ. வ. அ. கூ. சங்கத்தின் ஏழு அங்கத்தவர்கள் இராணுவத்தின் பிடிக்குள் சிக்குண்டதாக தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தின் போது, சித்தியம்புளியடியில் இயங்கி வந்த சங்கக்கிளை முற்றாகச் சேதமாக்கப்பட்டு சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்துள்ளதாக அறிய வந்துள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கைகளினால் தொழில் பாதிப்படைந்த 193 அங்கத்தவர்களுக்கும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க தென்மராட்சிப் பகுதி சங்கங்களுடனும், வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசத்துடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்திருப்பதாக சங்க பொதுமுகாமையாளர் திரு. கா. சிவஞானம் தெரிவித்தார்.

## இப்படியும் நடக்கிறது ?

முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இருந்த, இடம் பெயர்ந்தவர்களுக்கான ஒரு தொகுதி அட்டைகள் காணாமல் போனமையால் மோசடிகளை தவிர்ப்பதற்காக 28 பி முத்திரைக்கான இலவச உலர் உணவு விநியோகத்தை யாழ் செயலக புனர்வாழ்வு பகுதி தனது நேரடிக்கண்காணிப்பில் மேற்கொண்டமையானது உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட பொருத்தமான நடவடிக்கையாகும்.

இந்நடவடிக்கையினால் மக்களின் வெறுப்புக்கும், ஆத்திரத்திற்கும் ஆளானவர்கள் சேவை உள்ளம் கொண்ட கூட்டுறவாளர்களும் பணியாளர்களுமே. இதன் பாதிப்பை குறித்த ஒரு பல நோ. கூ. சங்கத்தில் என் கண்ணால் நேரில் காண முடிந்தது.

எங்கேயோ நடைபெற்ற தவறை சங்கங்களில் வைத்து "தாழித்தது" தான் கூட்டுறவாளர்களுக்கு ஏற்பட்ட மனவேதனை!

இனிமேலாவது இத்தகைய தவறுகள் எங்கு ஏற்படும் எனத்தெரிந்து கொண்டால் அந்த இடத்திலேயே அதனோடு சம்பந்தப்பட்டவர்களால் சீர்செய்து கொள்ளப்பட வேண்டும் என்பதை உணர்ந்து செயல்பட்டால் எவருக்கும் பாதிப்பு இல்லை.

"எய்தவனிருக்க அம்பை நோகலாமா"?

— ஊடுருவி —

# கூட்டுறவு சம்மேளனங்களின் துணைவிதி

ஏழு மாகாண மட்ட கூட். சம்மேளனங்களின் துணைவிதிகளைத் தயாரிப்பதற்கு ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் ஜனாப். என். எம். அலி, திருகோணமலை கூ. அ. உ. ஆணையாளர்கள் திரு டி. கருணாரட்ணா, திரு எஸ். லிங்கநாதன், திரு. எம். லோகநாயகம், திருமலை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். அருளானந்தம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இம் மாதம் 31-ம் திகதிக்குள் இத்துணை விதிகளைத் தயாரித்து முடிக்கும்படி வடகிழக்கு மாகாண கூட். அபி. ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா இக்குழுவினரைக் கேட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

# கூட்டுறவு பொத்தக விற்பனை நிலையம் திறப்பு

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை இல 388 காங்கேசன் துறை வீதி யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு பொத்தக விற்பனை நிலையம் ஒன்றை அண்மையில் திறந்துள்ளது.

யாழ். மா. கூ. சபைத்தலைவர் திரு. தா. கந்தசாமி தலைமையில் யாழ். மா. பி. நெசவாளர் கூ. சங்கத்தலைவரும் கூட்டுறவுச்சபைப் பணிபாளருமான திரு. எம். புலேந்திரன் இவ் விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்தார். கூட்டுறவாளர் பலர் கலந்துகொண்டனர்.

இவ் விற்பனை நிலயத்தில் பாடசாலை மாணவர்களுக்குரிய சகல பாடசாலை உபகரணங்களும் கூட்டுறவுச்சபை வெளியீடுகளும் நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# புதிய கட்டிடத்தில் இயங்கும்

வட மாகாண ப. தெ. வ. அ. கூ. சங்க சமாச தலைமைக் காரியாலயம் இம்மாதம் 19-ம் திகதி முதல் சுண்டுக்குழி சோமசுந்தரம் லேனில் உள்ள தனது சொந்தக்கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளதாக சமாசத்தலைவர் திரு. சா. செல்வரத்தினம் தெரிவித்தார்.

இக் கட்டிடத்தை சுமார் 20 லட்ச ரூபா செலவில் சமாசம் கொள்வனவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*பிராந்திய வங்கி......*

கான ஆற்றல் வங்கிக்கு இருத்தல் வேண்டும்.

பிராந்திய வங்கி அமைப்பு வெற்றிபெற வேண்டுமானால் கடன் அறவீடு சம்பந்தமான நீதிமன்று அமைக்க வேண்டும். கொடுக்கப்படுகின்ற கடன்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். வங்கி அமைப்பு முறை உடையாமல் இருப்பதற்கு இறுக்கமான சட்டங்கள் உண்டாக்கி உள்ளார்கள் அவற்றை எமது பிரதேசத்திற்கேற்ப இறுக்கமாக கடைப்பிடிக்கவேண்டும். வழங்கப்படும் கடன்களில் 95% அறவிடப்படவேண்டும்.

எனவே எமது பிரதேசத்தின் துரித வளர்ச்சிக்கு பிராந்திய வங்கி அமைப்பு முறை உருவாக்கப்பட வேண்டும். இன்று கூட்டுறவாளர் மத்தியில் கூட்டுறவு வங்கி அமைக்க வேண்டுமென்ற கருத்து நாடளாவிய ரீதியில் வலுப்பெற்று வருவதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

தொகுப்பு :

— எஸ். துரை

# தையல் இயந்திர திருத்தல் பயிற்சி

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடாத்தப்பட்டு வரும் மகளிர் பயிற்சித்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரம் திருத்துதலுக்கான பயிற்சி நடைபெற்று வருகின்றது.

மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வரும் இப்பயிற்சி வகுப்பில் சுமார் 40 பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

# கைதடி, மட்டுவிலில் கிளை நிலையங்கள்

அண்மையில் இடம்பெற்ற "இடிமுழக்கம்" இராணுவ நடவடிக்கையினால் நீர்வேலி பல நோ. கூ. சங்கத்தின் நீர்வேலிப் பகுதிகளிலுள்ள விற்பனை நிலையங்கள் யாவும் கோப்பாயிலுள்ள கிளை விற்பனை நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் திரு. எஸ். இராசசேகரம் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி கைதடி, மட்டுவில் பகுதிகளிலும் கிளைகள் திறக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

*தமிழ் மக்கள் ... ...*

பட்ட விவசாய உற்பத்திப் பொருட்கள் நாசமாக்கப்பட்டும், அழிக்கப்பட்டுமுள்ளன.

★ இத்தகைய மனிதநேயமற்ற செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து கொடிய யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்ட நடவடிக்கை எடுக்குமாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

*வெதுப்பக ஊழியர்... ...*

இச் சம்பவத்தின்போது வெதுப்பக முகாமையாளர் திரு. ச. நவராசா, கிளை முகாமையாளர் திரு சி. சிவலிங்கம் மற்றும் வெதுப்பக தொழிலாளர் மூவரும் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

*குறுங்கால ... ...*

வடிக்கைகளில் பங்குகொள்ள வைப்பதற்கு ஏற்ற வகையில் எதிர்வரும் 4 மாத காலத்திற்கும் அங்கத்தவர் கல்வி, உயர் முகாமைத் துணுக்கு முக்கியத்துவம் கொடுத்து கூட்டுறவுக் கல்வித்திட்டமொன்றை தயாரிக்குமாறு, வடகிழக்கு மாகாணத்திலுள்ள சகல மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர்களையும் கூட். அபி. ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா கடிதமூலம் கேட்டுள்ளார்.

ஆணையாளர் அக்கடிதத்துடன் மாதிரி வழிகாட்டல் கல்வித்திட்டம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

## இடமாற்றம்

நல்லூர் பல நோ. கூ. சங்க திருநெல்வேலி கிராமியவங்கி, திருநெல்வேலி ஆடியபாதவீதியில் உள்ள சங்கத்தலைமைக் காரியாலயத்திற்கு கீழ் உள்ள கட்டிடத்திற்கு அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

*மா விநியோகம் ...*

இதேவேளை பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் பல நோ. கூ. சங்கங்கள்மூலம் மாவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனால் யாழ்ப்பாணத்தில் மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

*நூல் அறிமுகம் ... ...*

இந்நூல் ஏழு அத்தியாயங்கள் மூலம் கச்சதீவு பற்றிய புவியியற் பின்னணியும்; கச்சதீவின் உரிமைப் பிரச்சனையும், வரலாற்றுப் பின்னணியும்; கச்சதீவு உரிமை தொடர்பான கோரிக்கைகளும் எதிர்க்கோரிக்கைகளும் 1974-ம் ஆண்டு உடன்படிக்கை 1976ம் ஆண்டு உடன்படிக்கை; 1983-ன் பின்னர் வடபகுதி கடற்பரப்பில் ஏற்பட்ட நிகழ்வுகள், சுமுகமான தீர்வை நோக்கி என்பவற்றின்மூலம் நூலாசிரியர் கச்சதீவு பற்றிய உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளார். கச்சதீவு இலங்கைக்கே சொந்தமென ஒப்பந்தம் நிறைவேற்றியதன் மூலம் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு கிடைத்த வெற்றியாக கருதினால்; கச்சதீவு தமிழ்ஈழத்தின் பிரதேசமென ஆதாரங்களுடன் நிலைநிறுத்திய பெருமை ஆசிரியரையே சாரும். எமது சந்ததிக்குபேணும் ஆவணம் இந்நூல்

— ஆய்வாளன்

## சொற்பொழிவு

நல்லூர் பல நோ. கூ. சங்கத்தில் சங்கத்தலைவர் திரு. இ. இராஜாமகேந்திரசிங்கம் தலைமையில் சுவாமி சித்ரூபானந்த மகராஜ் "கீதையும் கர்மயோகமும்" என்னும் தலைப்பில் அண்மையில் சமயச் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார்.

பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோர் இச் சொற்பொழிவைக் கேட்டுப் பயனடைந்தனர். பொதுமுகாமையாளர் செல்வி த. பேரம்பலம் நன்றி கூறினார்.

*கூட்டுறவில் ... ...*

கூ. அ. உ. ஆணையாளர் திரு. எஸ் ஜெயபாலன் பேசுகையில்;

கூட்டுறவு நிறுவனங்களில் ஊழியர்கள் பங்களிப்புக்கும், அவர்களது வினைத்திறனை உருவாக்குவதற்கும் இத்தகைய பயிற்சி அவசியம் என குறிப்பிட்டார்.

கூட்டுறவுசபை உபதலைவர் திரு. சூ சிறில பேசுகையில்;

எமது பிரதேசத்தில் உள்ள வளங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து கூட்டுறவு அடிப்படையில் அவற்றை விருத்தசெய்ய இத்தகைய பயிற்சி பயனுள்ளதாக அமையும் என்று குறிப்பிட்டார்.

செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் நன்றியுரை நிகழ்த்தினார்.


## விளம்பர அன்பளிப்பு

★ உடுப்பிட்டி பல நோ. கூ. சங்கம்

★ மானிப்பாய் பல நோ. கூ. சங்கம்

★ அளவெட்டி மல்லாகம் பல நோ. கூ. சங்கம்

★ அச்சுவேலி ப. தெ. வ. அ. கூ. சங்கம்

★ பண்டத்தரிப்பு ப. தெ. வ. அ. கூ. சங்கம்


யா. மா. கூ. சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டுவீதி மா. கூ. சபையினரால் ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்டது.